[1994 ஏப்ரல் 6

203—

ஆலங்குடி தொகுதியில் வெட்டன்விடுதி தாய் சேய் நலவிடுதியை ஆரம்பச் சுகாதார நிலையமாக மாற்றி அமைத்தல்.

***17555—திரு. எஸ். சண்முகநாதன் :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, வெட்டன்விடுதியில் இயங்கிக்கொண்டிருக்கும் தாய் சேய் நலவிடுதியைத் தரம் உயர்த்தி ஆரம்பச் சுகாதார நிலையமாக மாற்றி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

ஆலங்குடி தொகுதியில் இருக்கும் வெட்டன்விடுதியில் இயங்கிக்கொண்டிருக்கும் தாய் சேய் நல விடுதியைத் தரம் உயர்த்தி ஆரம்பச் சுகாதார நிலையமாக மாற்றும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

முற்பகல் 10.10

திரு. எஸ். சண்முகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குடி தொகுதி, வெட்டன்விடுதியில் இருக்கின்ற தாய் சேய் நல விடுதியை ஆரம்பச் சுகாதார நிலையமாக மாற்றுவதற்கான கோரிக்கையானது கிட்டத்தட்ட அந்தப் பகுதியிலே இருக்கிற 20, 25 கிராமங்களுக்குப் பயன்படுகின்ற ஒன்றாகும். வெட்டன்விடுதிக்குத்தான் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் சென்று வருகின்ற காரணத்தால், 20, 25 கிராமங்களில் இருக்கின்ற மக்கள் பயன்பெறும் வகையிலே அந்த தாய் சேய் நல விடுதியை ஆரம்பச் சுகாதார நிலையமாக மாற்ற வேண்டுமென்ற அந்தப் பகுதி பெரும்பான்மை மக்களுடைய கோரிக்கையை ஏற்று, அரசு வருகின்ற ஆண்டிலாவது அதைப் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30,000 ஜனத்தொகைக்கு ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் என்ற நிலையை நாம் நிர்ணயித்திருக்கிறோம். அதன்படி அந்த ஒன்றியத்தைப் பொறுத்தவரையில் 89,992 மக்கள் இருப்பதாகக் கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஏற்கெனவே அங்கே தேவையான அளவுக்கு இந்தக் கணக்கின் அடிப்படையிலே இருக்கின்ற காரணத்தால்தான் முடியாது என்று சொல்லியிருக்கிறோம். எனவே அதை மீண்டும் ஆய்வு செய்து, புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லை.

1994 ஏப்ரல் 6]

திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருந்த மக்கள் தொகைக் கணக்கு அடிப்படையிலேதான் அங்கே மக்கள் தொகை குறைவு என்று அரசுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். இப்போது அரசாங்கம் சொல்லுகிற சட்ட விதிகளுக்கு ஏற்ப 30,000 மக்கள் தொகை இருக்கிற காரணத்தாலேதான் அந்தக் கோரிக்கையை வைக்கிறோம். மேலும் அந்தத் தாய் சேய் நல விடுதியிலே பணியாளர்கள் நிரந்தரமாகத் தங்கிப் பணியாற்றுவதற்கு லைட் வசதி இல்லை. அவர்கள் அங்கே நிரந்தரமாகத் தங்கிப் பணியாற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் தொகையைப் பொறுத்த வரையில் அதிகமாக இருந்து, ஆரம்ப சுகாதார நிலையம் குறைவாக இருக்குமேயானால் பட்டியல் 1 -லே எடுத்துக்கொள்ளப்பட்டு, நிதி நிலைமைக்கேற்ப எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். மற்றபடி துணை சுகாதார நிலையத்தில் இருக்கும் வசதிகள் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அது பற்றி ஆய்வு செய்யும்படி உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 204. திரு. இராம. இராமநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

204—

கும்பகோணத்திலிருந்து இயக்கப்பட்ட சில திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை மீண்டும் இயக்குதல்.

***22416**—திரு. இராம. இராமநாதன் :*

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணத்திலிருந்து திருப்பதி, இராமேஸ்வரம், பாலக்காடு ஆகிய இடங்களுக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் இயக்கி நிறுத்தப்பட்ட பேருந்துகளை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருப்பதிக்கு தஞ்சாவூரிலிருந்து கும்பகோணம் வழியாக பேருந்து இப்பொழுது இயக்கப்படுகிறது. பாலக்காட்டிற்கு பேருந்து கேரள அரசின் அனுமதியை மீண்டும் பெற்ற பின்பு இயக்கப்படும். இராமேஸ்வரத்திற்கு இயக்கப்பட்ட பேருந்து, பயணிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருந்ததால் நிறுத்தப்பட்டது.

திரு. இராம. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் உலகப் பிரசித்தி வாய்ந்ததோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு